DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**ID** 71/2025

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | WW1 |
| NAME | P. ராஜேஷ்குமார் |
| FATHER NAME | பழனியப்பன் |
| ADDRESS | 12/5, இராமநாதபுரம் காலனி, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர். |
| AGE | 39 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.11.03.2026

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன், நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். எனது எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ்கண்ட ஆவணங்களை எனது வழக்கு தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

04.01.2022 தேதியிட்ட ந.க.எண் 503/2020ன் சமரச முறிவறிக்கையின் நகல் Ex W1. 18.07.2020 தேதியிட்ட எதிர்மனுதாரர்

நிர்வாகத்திற்கு மனுதாரர் வழங்கிய கடிதம் Ex W2. ஜீன் 2020 மாதத்திற்குண்டான சம்பள ரசீதின் நகல் Ex W3. 28.08.2020 தேதியிட்ட மனுதாரர் சங்கம் கோவை, தொழிலாளர் அலுவலர் முன்பாக தாக்கல் செய்த 2(K) மனு ந.க.எண் 503/2020 ன் நகல் Ex W4. 07.01.2024 தேதியிட்ட சந்தா ரசீது நகல் Ex W5. எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய அடையாள அட்டையின் நகல் Ex W6. 20.08.2020 தேதியிட்ட மனுதாரர் சங்கம் வழங்கிய தீர்மானம் நகல் Ex W7.

குறுக்குவிசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2014 முதல் ஓட்டுநராக பணியில் சேர்ந்து 2016 வருடத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டு தற்சமயம் வரை பணியாற்றி வருகிறேன். எதிர்மனுதாரரின் நிறுவனம் பொது மக்களின் அத்தியாவசிய தேவைக்காக பேருந்துகளை இயக்கி வருகிறது என்றால் சரிதான். ஜீன் மாதம் 2020 வருடத்தில் எனது சம்பளம் ரசீதில் எனது ஈட்டிய விடுப்பு இருந்து 3 நாட்கள் கழிக்கப்பட்டுள்ளதை என்பதை அறிந்து இவ்வழக்கை சங்கத்தின் மூலமாக தாக்கல் செய்துள்ளேன். ஜீன் மாதம் 2020 வருடத்தில் எனக்கு முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். கோரோனா தொற்று உச்சபட்சத்தில் இருந்த காலகட்டத்தில்

எதிர்மனுதாரரின் தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் தான் பணி வழங்கப்பட்டது என்றால் சரிதான். இதற்கான அரசாணை மற்றும் சுற்றறிக்கை போடப்பட்டது என்றால் சரிதான். அந்த அரசாணை எண் G.O. 304, dated 17.04.2020 ன் நகல் Ex M1. 16.05.2020 தேதியிட்ட சுற்றறிக்கையின் நகல் Ex M2. ஆனால் அரசாணை மற்றும் சுற்றறிக்கை அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எங்களுக்கு பணி வழங்கும் விவரம் தொலைபேசியில் தான் அழைத்து நிர்வாகம் வர சொன்னது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனம் திங்கள், புதன், வெள்ளி அடுத்த சுழற்சி முறையில் செவ்வாய், வியாழன், சனி என்ற முறையில் பணி வழங்கப்பட்டு எதிர்மனுதாரர் வர செய்தார்கள் என்றால் சரிதான். ஜீன் மாதம் 2020 காலகட்டத்தில் கோரோனா தொற்று உச்சக்கட்டத்தில் இருந்தது என்றால் சரிதான். நான் வராத காரணத்தினால் என்னுடைய முன்னால் நடவடிக்கைகளை வைத்து எனக்கும், சக தொழிலாளர்களுக்கும் ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டும், மறுநாள் வேலைக்கு வரும் பொழுது தெரிவிக்கப்பட்டும் பின்னால் பணி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அலைபேசியில் அழைத்தும் வேலைக்கு வராத காரணத்தினால் தான் ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டது என்றால்

சரியல்ல. என்னுடைய ஈட்டியவிடுப்பு கழிக்கப்பட்ட விவரத்தை தெரிவித்து எதிர்மனுதாரருக்கு கடிதம் எழுதினேனா என்றால் எழுதினேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் ரசீது தாக்கல் செய்யவில்லை. Ex W2ன் படி நான் எதிர்மனுதாரரின் இயக்குநருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன், ஆனால் அதை யார் பெற்றார்கள் என்றோ, அதற்குண்டான ரசீதோ அல்லது RPAD coverவோ இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். இது இந்த வழக்கிற்கென்று தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. நேதாஜி சங்கம் என்ற பெயரில் நிர்வாகத்திற்கு எதிராக வழக்குகளை தொடுத்தும் மற்றும் நேதாஜியின் போட்டோவை வைத்து கொண்டும், அவரது பெயரை வைத்து கொண்டும், வேண்டுமென்றே இந்த வழக்கை திசைதிருப்பியும், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொள்ளாச்சியில் இருந்து உக்கடம் கிளைக்கு அழைத்த போதெல்லாம் வந்து பணியாற்றினேன். மற்ற ஓட்டுநர்களுக்கெல்லாம் 30 நாட்களுக்கு சம்பளம் கொடுத்துவிட்டு எங்களுக்கு மட்டும் 3 நாட்கள் ஈட்டியவிடுப்பை கழித்து கொண்டார்கள். மற்ற ஓட்டுநர்களுக்கு ஈட்டிய விடுப்பு கழிக்கவில்லை. இது தான் நாங்கள் சரியல்ல என்று கூறுகிறோம். இது சம்பந்தமாக தொழிலாளர் துறையில் மனு

கொடுத்தோமா என்றால் மனு கொடுத்தோம். வேண்டுமென்றே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.